

20.11.2026 செய்திகள்

2035-க்குள் உலகின் மிகப் பெரிய மதமாக இஸ்லாம்

- வரும் 2035-ஆம் ஆண்டுக்குள் உலகில் கிறிஸ்தவ மதத்தை தாண்டி மிகப் பெரிய மதமாக இஸ்லாம் உருவாகக்கூடும் என்று ஆய்வு ஒன்றில் தகவல் வெளியாகியுள்ளது.
- இது தொடர்பாக அமெரிக்க தலைநகர் வாஷிங்டனை தலைமையகமாகக் கொண்ட பியூ ஆராய்ச்சி மையம் வெளியிட்ட புதிய ஆய்வறிக்கையின்படி, 2020 முதல் 2070-ஆம் ஆண்டு வரையிலான காலத்தில், உலகின் மொத்த மக்கள் தொகை 29 சதவீதம் அதிகரிக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.
- இதில் கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை 30 சதவீதமும், இஸ்லாமியர்களின் எண்ணிக்கை 80 சதவீதமும் அதிகரிக்கக்கூடும்.
- வரும் 2035-ஆம் ஆண்டுக்குள் உலகில் கிறிஸ்தவ மதத்தை தாண்டி மிகப் பெரிய மதமாக இஸ்லாம் உருவாகக்கூடும். தற்போதைய போக்கு தொடர்ந்தால், 2070-ஆம் ஆண்டுக்குள் உலகில் 360 கோடிக்கும் அதிகமான இஸ்லாமியர்கள் இருப்பர்.
- அதே வேளையில், கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை 300 கோடிக்கும் குறைவாக இருக்கும்.
- இஸ்லாமியர்கள் கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை அதிகரித்தாலும், இஸ்லாமியர்களின் எண்ணிக்கை மிக வேகமாக வளர்ந்து வருகிறது.
- இதற்கு பிற மதத்தினரைவிட, இஸ்லாமியர்கள் அதிக குழந்தைகளைப் பெற்றுக் கொள்வதே காரணம். இதில் மதமாற்றம் மற்றும் பிற வழிகளில் மத அடையாளத்தை மாற்றுவது மிகக் குறைந்த பங்கையே கொண்டுள்ளன.
- 2020-முதல் 2025-ஆம் ஆண்டு வரையிலான காலத்தில், இஸ்லாமியர்களின் சராசரி குழந்தை பிறப்பு விகிதம் 3.1-ஆகவும், கிறிஸ்தவர்களின் சராசரி குழந்தை பிறப்பு விகிதம் 2.5-ஆகவும் இருந்தது.
- 2020-ஆம் ஆண்டு இந்தியா உள்பட உலக அளவில் 120 கோடியாக இருந்த ஹிந்துக்களின் எண்ணிக்கை 2070-இல் 140 கோடியாக அதிகரிக்க வாய்ப்புள்ளது.
- அதே வேளையில், ஹிந்துக்களின் எண்ணிக்கையை விட, பிற மதத்தினரின் எண்ணிக்கை மிக வேகமாக வளரும்.
- இதன் விளைவாக, உலக மக்கள் தொகையில் 2020-ஆம் ஆண்டு 15 சதவீதமாக இருந்து ஹிந்துக்களின் எண்ணிக்கை, 2070-ஆம் ஆண்டு 4 சதவீதமாக குறையக்கூடும் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயர்நீதிமன்றம் தீர்ப்பு

- தமிழகத்தின் ஆற்று மணலும் மலைகளின் பாறைகளும் தமிழர்களுக்குப் பயன்படுவதைக் காட்டிலும், மாற்றாருக்கு பயன்படுவதே அதிகம் என்பதைக் காணும் எவருக்கும் அறச்சீற்றம் ஏற்படாமல் இருக்காது.
- தமிழ்நாட்டில் இருந்து ஆற்றுமணல் மற்றும் மலைகளை உடைத்து, கருங்கற்களை ஜல்லிகளாக மாற்றி கேரள மாநிலத்துக்கு கொண்டு சென்று அதிக விலைக்கு விற்கு அதிக லாபம் பார்க்கும் வணிகம் கடந்த பல ஆண்டுகளாக தொடர்ந்து, தொய்வின்றி நடந்து கொண்டிருக்கிறது.
- இதைவிட மிகவும் வருந்தத்தக்க விஷயம், இந்த மணலும் ஜல்லிகளும் மாலத்தீவு போன்ற நாடுகளுக்கு, மேலும் பல கோடி ரூபாய் லாபத்தில் கேரளத்தில் இருந்து ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

- தமிழகத்தில் கனிமங்களை விற்கவும் மலைகளை உடைக்கவும் அனுமதி பெற்ற சில நிறுவனங்களே வேறு பெயரில் கேரளத்தில் ஒரு நிறுவனத்தைத் தொடங்கி, இந்த மணல் ஜல்லியை அங்கிருந்து ஏற்றுமதி செய்கின்றன.
- தமிழக பேரவைத் தேர்தலில் வெற்றி பெற்று புதிதாக ஆட்சிக்கு வந்த தவெக அரசு, இந்த விவகாரத்தில் தலையிட்டு, தடுக்க முயன்றது.
- தற்போதைய ஒப்பந்ததாரர்கள் அனைவரும் முந்தைய அரசில் அனுமதி பெற்றவர்கள். அவர்களைக் கட்டுப்படுத்த, கனிமங்களை வெளிமாநிலங்களுக்கு கொண்டு செல்லக்கூடாது என்று கடந்த ஜூலை 27-ஆம் தேதி தடையாணை பிறப்பித்தது ஜோசப் விஜய் அரசு.
- தமிழ்நாட்டில் சட்டவிரோதமாக கனிமம் எடுத்தல், கொண்டு செல்லுதல், சேகரித்து வைத்தல் ஆகியவற்றில் ஈடுபடும் கனிம விற்பனையாளர்கள் சட்டம் 2011-இன் விதி 3ஏ-படி தடை விதிக்கப்படுவதாக அறிவித்தது.
- அந்தத் தடை அரசு அனுமதித்த ஒப்பந்த விதிகளுக்கு மாறானது என்றும், அரசின் தடை உத்தரவு, சட்ட விரோதமாக மணல் எடுத்தல் மற்றும் மலை உடைத்தல் ஆகியவற்றுக்குத்தான் பொருந்துமே தவிர, சட்டப்படி ஒப்பந்தம் பெற்றவர்களுக்குப் பொருந்தாது என்றும், அவர்கள் வெளிமாநிலங்களுக்கு விற்பனை செய்வதைத் தடுப்பது அரசியல் சாசனம் வழங்கும் வர்த்தக உரிமைக்கு குந்தகமாக அமையும் என்றும் நீதிமன்றம் கூறியுள்ளது.
- தனக்கு முன்னால் வைக்கப்பட்ட ஆதாரங்களின் அடிப்படையில் வழங்கப்பட்ட நீதிமன்றத்தின் தீர்ப்பை நாம் விமர்சிக்க முடியாது.
- தமிழக அரசு இத்தகைய நிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுக்கும்போது, ஒப்பந்தத்தில் அனுமதிக்கப்பட்ட அளவைக் காட்டிலும் அதிகமாக வெட்டி எடுத்தால், ஒப்பந்தத்தை ரத்து செய்யக்கூடிய உரிமை பெற்றிருக்கிறது.
- தமிழ்நாட்டில் கனிமம் வெட்டி எடுக்க உரிமம் பெற்ற எந்த ஒரு நிறுவனமும், அனுமதிக்கப்பட்ட அளவைக் காட்டிலும் கூடுதலாக வெட்டியெடுத்த குற்றச்சாட்டில் இருந்து தப்பிக்க இயலாது.
- நேர்மையாகச் செயல்பட்ட ஒப்பந்தாரர்கள் மிகச் சிலராகவே இருப்பார்கள். ஒப்பந்தத்தை ரத்து செய்துவிட்டு, புதிய ஒப்பந்தம் கோரும் போது தமிழ்நாடு தவிர வேறு மாநிலங்களுக்கு கொண்டு செல்லக்கூடாது என்ற விதிமுறையைச் சேர்க்க முடியும்.
- இதற்கு விருப்பம் இருப்பவர்கள் மட்டுமே ஒப்பந்தப்புள்ளி கோரச் செய்திருக்கலாம். தமிழக அரசு ஆற்று மணலை விற்கின்றபோதும், அனுமதிக்கப்பட்ட அளவைக் காட்டிலும் பலமடங்கு மணல் அள்ளப்பட்டதாக அமலாக்கத்துறை விசாரணையில் தெரியவந்தது.
- இதற்கான விசாரணைக்கு மாவட்ட ஆட்சியாளர்கள் ஒத்துழைக்கவில்லை என்று நீதிமன்றத்தில் புகார் சொல்லப்பட்டது.
- இந்த விவகாரம் வாய்தா பெற்று காலத்தால் மறக்கடிக்கப்பட்டது. யாரும் இதுவரை தண்டனை பெறவில்லை.
- அரசு காட்டிய கணக்குக்கும் தோண்டப்பட்ட அளவுக்கும் வேறுபாடு இருப்பதற்கு முக்கியமான ஆதாரம் கிடைத்ததாகவும், அதை அதிகாரிகள் முறையாகப் பதிவு செய்யவில்லை என்றும் விசாரணை அறிக்கை சுட்டிக் காட்டியிருக்கிறது.
- பல மடங்கு அதிகமாக மணல் அள்ளுவதற்காக வாங்கப்பட்ட சக்தி வாய்ந்த ராட்சத ஜேசிபி வாகனங்கள், வாரண்ட்டி காலம் முடியும் வரை பயன்பாட்டில் இருந்ததைத் தொடர்புடைய வெளிநாட்டு நிறுவனத்திடமிருந்து பெற முடியும்.
- அந்த இயந்திரம் இயங்கிய காலத்தில் அள்ளப்பட்டிருக்கக்கூடிய உத்தேச மணல் அளவும் கணக்கில் காட்டப்பட்டுள்ள மணல் விற்பனை அளவும் பொருந்திப் போகவில்லை என்பதை அமலாக்கத்துறை அதிகாரிகள் கண்டறிந்தனர்.
- ஆனால், இந்த உண்மைகள் முறையாகப் பதிவு செய்யப்படாமல் மணலில் மூடி மறைக்கப்பட்டது; இப்போது மறக்கடிக்கப்படுகிறது.
- தமிழக ஆற்று மணலை விற்கும்போது, தமிழகத்தில் எந்த கட்டுமானப் பணிக்காக வாங்கப்படுகிறது என்பதைப் பதிவு செய்து, அது அதற்குத்தான் பயன்படுத்தப்பட்டதா என்பதை உறுதி செய்வதன் மூலம் பெருமளவு நம் கனிமச் செல்வம் கொள்ளை போவதைத் தடுக்கலாம்.
- நீதிமன்றத் தீர்ப்பால் தவெக அரசு தயங்கி நின்றுவிடாமல், ஒப்பந்தங்கள் மீறப்பட்டுள்ளதை விசாரணையில் கண்டறிந்து ஒப்பந்தத்தை ரத்து செய்யும் வாய்ப்புகளை இழந்துவிடக்கூடாது.